**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No.2/2023**
**Prosecution Witness P.W. 1**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. P.செந்தில்முத்துகுமரன் | Calling | : AE/ Pasumalai |
| Father's name | : திரு. V.பஞ்சவர்ணம் | Religion | : Hindu |
| Village | : பைக்காரா | Age | : 38 |
| Taluk | : மதுரை | | |

நாள் **- 04.09.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் பைக்காரா மின்அலுவலகத்தில் மின்னொடு தொடர்பணியில் உதவி மின்பொறியாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை பார்த்துள்ளேன். கடந்த 09.08.2018ம் தேதியன்று மாலை 6.03 மணியளவில் கல்லுப்பட்டியில் இருந்து வில்லூர் செல்லும் தார்சாலையில் வில்லூர் கண்மாய் அருகே 11HD புளியம்பட்டி மின்பாதையிலுள்ள உயர்அழுத்தமின்சார வயர்களை TN63 BB 7571 என்ற பதிவெண் கொண்ட டிப்பர்லாரி சரியாக மூடாமல் வந்து, HD லைனில் மோதி மூன்று மின்கம்பங்கள் சேதம் அடைந்தது. எனது போர்மேன் எனக்கு தகவல் சொல்லி, 20 நிமிடத்திற்குள் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் போய் பார்க்கும் போது அந்த வாகனம் உயர்அழுத்த லைனில் மோதி நின்று இருந்தது. மின்கம்பங்கள் சேதம் அடைந்திருந்ததை பார்த்தேன். அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான். அவரை விசாரித்தேன். அவரது அடையாள அட்டையை வாங்கி பார்த்த போது பெயர் பூமிநாதன், புதுஜெயில்ரோடு என்றுஇருந்தது. மின்சாரவாரியத்திற்கு ரூ.58,020/- சேதம் ஆகும். அப்போது சேதப்படுத்திய நபரை மின்வாரியத்திற்கு பணம் கட்டுகிறீர்களா என்று கேட்போம், அவ்வாறு அவரை கேட்ட போது அவர் மறுத்ததால் நாங்கள் வில்லூர் காவல்நிலையத்திற்கு மறுநாள் காலை 10.08.2018ம் தேதி பகல் 2.00 மணிக்கு புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் நான் கொடுத்தது ஆகும், அது **அ.சா.ஆ.**1 ஆகும். எதிரியின்

கவனக்குறைவால் மேற்படி விபத்து நடந்தது. அவர் ஓட்டி வந்த வாகனத்தில் கொண்டு வந்த தாரை கொட்டிவிட்டு, அதை சரியாக மூடாமல் வந்ததால் மேற்படி விபத்து நடந்தது. இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னைவிசாரணை செய்தார்.

<u>**குறுக்குவிசாரணை**</u>

எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக தகவல் தெரிவித்த போது டி.கல்லுப்பட்டி ஊரகபிரிவு அலுவலகத்தில் உதவி மின்பொறியாளராக பணியில் இருந்தேன். யார் மூலமாக தகவல்கிடைத்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் புகார்மனுவில் போர்மேன் மூலம் எனக்கு தகவல் கிடைத்ததாக சொல்லியுள்ளேன். போர்மேன் பெயர் கார்த்திகேயன். கார்த்திகேயன் என்பவரை விசாரித்தால் என்ன சம்பவம் நடைபெற்றது, எவ்வாறு நடைபெற்றது என்பது தெரியவரும் என்றால் சரிதான். அவர் சம்பவத்தை நேரில் பார்த்து தான் தகவல் சொன்னார் என்றால்சரிதான். எனக்கு தகவல் கிடைத்த அரைமணிநேரத்தில் நான் சம்பவ இடம் சென்றேன். டி.கல்லுப்பட்டி to வில்லூர் சாலை எந்த திசை நோக்கி செல்கிறது என்றால் திசை தெரியாது. டி.கல்லுப்பட்டி to வில்லூர் சாலை எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி மின்கம்பி கடந்து செல்கிறது என்றால் திசை தெரியாது. வில்லூர் கண்மாய் பகுதியில் எங்களுடைய அலுவலகம் சார்ந்து நிறுவப்பட்ட மூன்று மின்கம்பங்கள் உள்ளது. எங்களுடைய அலுவலகத்தில் இருந்து ஒவ்வொரு மின்கம்பத்திற்கும் தனிப்பட்ட எண் கொடுக்கப்படும் என்றால் கொடுக்கப்படாது. ஒரு மின்கம்பத்தில் வேலை உள்ளது என்றால் குறிப்பிட்ட எண் கிடையாது, குறிப்பிட்ட இடத்தை வைத்து அடையாளம் காண்போம். நான் கொடுத்த புகாரில் மேற்படி மூன்று மின்கம்பங்கள் ரோட்டிற்கு எந்த திசையில், யாருடைய நிலத்தில் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு மின்வயருக்கும் தரையில் இருந்து குறிப்பிட்ட அளவு உயரம் இருக்க வேண்டும் என்ற அளவு நிர்ணயம் உள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்தபுகாரில் சேதமடைந்ததாக சொல்லப்படும் மின்கம்பங்கள் எவ்வளவு உயரத்தில் நிறுவப்பட்டிருந்தது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.பொதுவாக அவ்வாறு நிறுவப்பட்ட மின்கம்பங்கள் மழையின் காரணமாகவோ, நிலத்தில் தன்மை காரணமாகவோ சாயும் சூழல் ஏற்பட்டால் மின்வயரினுடைய உயரம் தாழ்வுநிலைக்கு வருவதற்கு

வாய்ப்பு உண்டு என்றால் சரிதான், ஆனால் மேற்படி மின்கம்பங்கள் அந்தளவிற்கு சாய்ந்து இருக்கவில்லை. மின்கம்பங்கள் ரோட்டிற்கு ஓரத்தில் இருப்பதால் அடிக்கடி சென்று வரும் போது அதை பார்ப்போம். சம்பவ நேரத்தில் தார்சாலை வேலை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். மின்கம்பங்களுக்கு இடையே தார்சாலை வேலை நடந்தால் எங்களிடம் அனுமதிகோர வேண்டுமா என்றால் இல்லை. விபத்தில் ஈடுபட்ட வாகனத்தை காவல்நிலையத்திற்கு அன்றையதினமே அழைத்து வந்தோம். அன்றையதினமே சேதம் அடைந்ததற்கான சேதமதிப்பீடு ஆய்வுஅறிக்கையை எதிரியிடம் கொடுத்து பணம் கேட்டேன். மேற்படி சேதமதிப்பீட்டை பார்த்தால் தனிதனியாக ஒவ்வொரு பொருளுக்கும் சேதமதிப்பீடு சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எதிரியை காவல்நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு எவ்வளவு நேரத்தில் ஆய்வுஅறிக்கையை தயார் செய்தேன் என்றால் சுமார் ஒரு மணிநேரத்தில் தயார் செய்து கொடுத்தேன். அதுவரை எதிரிமீது வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் எதிரியை காவல்நிலையம் அழைத்து சென்ற போது என்னிடம் எதற்காக காவல்நிலையம் வந்துள்ளோம், என்ன நடந்தது என்பதை கேட்டார்கள், நானும் சொன்னேன். நான் சொன்ன விபரங்களை கேட்டு உடனடியாக போலிசார் சென்று சம்பவ இடத்தை பார்த்தார்கள். அவ்வாறு பார்த்து விட்டு வந்து என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகமில்லை. நான் எதிரியிடம் கேட்ட தொகையை கொடுத்திருந்தால், அவர் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ய வாய்ப்பில்லை என்றால் சரிதான். எங்களுடைய மின்வாரியத்தின் கவனக்குறைவின் காரணமாக மேறப்டி சேதம் அடைந்தததாக சொல்லப்படக் கூடிய மின்கம்பி தாழ்வுநிலையில் சென்று, நல்லநிலையில் சென்ற லாரியின் மீது உரசியதால் ட்ரிப் ஆகி மின்சப்ளை நின்றதால் எனக்கு தகவல் கிடைக்கப்பபெற்று நான் சம்பவஇடம் சென்றேன் என்றால் சரியல்ல. எங்களுடைய மின்வாரிய கவனக்குறைவால் தாழ்வுநிலையில் சென்ற மின்கம்பியால் மின்சப்ளை மற்றும் சேதமானது என்பது தெரிய வந்தால் எனது பணிக்கு பிரச்சனை வரும் என்ற காரணத்தினால் எதிரி மீது பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றும், அப்போது மின்கம்பியில் மோதியவாறே லாரி நின்றது என்ற

விபரத்தை புகாரிலோ, போலிஸ்விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மின்சாரசட்டத்தின்படி நான் நேரடியாக நீதிமன்றத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. உயர்அழுத்த மின்கம்பியில் லாரி மோதினால் லாரி மீதும் மின்சாரம் பாய்வதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் இல்லை. மேற்படி சேதம் அடைந்த மின்கம்பம் 11,000 வோல்ட் மின்சாரம் செல்லும். உண்மையில் நான் முதல்விசாரணையில் சொன்னது போன்று லாரியின் டிப்பர் மூலம் மின்கம்பிஇழுக்கப்பட்டு மின்கம்பம் சேதம் அடைந்திருந்தால் லாரியில் மின்சாரம் இழுக்கப்பட்டு, டிரைவருக்கும் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சம்பவ இடம் சென்று லாரி எதையும் நான் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மை சம்பவத்தை மறைத்து எங்களுடைய அலுவலகத்திற்கு பாதிப்பு வரக் கூடாது என்று இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

என்னிடம் காண்பிக்கப்படும் சேதமதிப்பு சான்றிதழ் நான் தயார் செய்தது ஆகும். அது **அ.சா.ஆ.**2 ஆகும்.

**குறுக்குவிசாரணை**

சேதங்கள் யாரை வைத்து சரிசெய்யப்பட்டது என்றால் மறுநாள் காலையில் சரிசெய்யப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும்அ.சா.ஆ.2 ஆனது நாங்கள் மறுநாள் வேலை செய்ததற்காக கொடுத்ததற்கான மதிப்பீட்டு சான்றிதழ் ஆகும். அ.சா.ஆ.2 ஆவணமானது நான் தயார் செய்தது ஆகும். நான் புகார் கொடுக்கும் போது நான் வேலையை செய்து முடித்த அ.சா.ஆ.2 ஆவணத்தை போலிசிடம் மாலை 3.00 மணியளவில் கேஸ் கொடுக்கும் போது கொடுத்தேன். புகார்கொடுக்கும் போது சேதம் அடைந்த வேலைகள் சரிசெய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.2 ஆனது வழக்கிற்காக பொய்யாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எந்தவித சேதமும்

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 சேதமதிப்பீடு ஆனது பொய் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.08 10:17:04 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.